LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

B.A. DEGREE EXAMINATION – **TAMIL**

SIXTH SEMESTER – **APRIL 2023**

/16/17/18UTL6MS01 – SPECIAL LITERATURE - THIRUKKURAL

Date: 12-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

பகுதி – அ (10x2=20 மதிப்பெண்கள்)

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

01. தமிழில் தோன்றிய முதல் அறநூல் எது? எழுதியவர் யார்?
02. குறள் வெண்பாவின் இலக்கணத்தைக் கூறுக.
03. திருவள்ளுவரின் பெற்றோர்களாகக் கருதப்படுபவர் யாவர்?
04. திருக்குறளுக்கு வழங்கப்பெறும் வேறுபெயர்களை எழுதுக.
05. திருக்குறளின் பழைய உரையாசிரியர்கள் எவரேனும் இருவரின் பெயர்களைத் தருக.
06. 'தமிழுக்குக் கதியாவர் இருவர்' – யாவர்?
07. ஔவையார் பாடிய அற இலக்கியங்களைப் பகர்க.
08. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? அவர் எந்நாட்டவர்?
09. வள்ளுவருக்கு மிகஉயரமான சிலை எங்கு நிறுவப்பட்டுள்ளது? சிலையின் உயரம் என்ன?
10. திருக்குறள் எந்த எழுத்தில் தொடங்கி எந்த எழுத்தில் நிறைவுபெறுகிறது?

பகுதி – ஆ (5x7=35 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.

11. தமிழில் உள்ள அற இலக்கியங்களை வரிசைப்படுத்துக.
12. பரிமேலழகரின் உரைச்சிறப்பினை உரைக்க.
13. 'அறன் வலியுறுத்தல்' அதிகாரக் கருத்துகளைத் தருக.
14. விருந்தோம்பலின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுக்க.
15. 'சொல்வன்மை'யின் தேவையை எழுதுக.
16. தலைவி பொழுதுகண்டு இரங்குவதற்கானக் காரணங்களைக் கூறுக.
17. நும்மைக் கவர்ந்த குறட்பாக்களுள் ஏழினை எழுதிக் காட்டுக.

பகுதி – இ (3x15=45 மதிப்பெண்கள்)

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. திருவள்ளுவமாலை கூறும் திருக்குறளின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

'கடவுள் வாழ்த்து', 'வான்சிறப்பு' ஆகியவற்றைப்பற்றி விரித்தெழுதுக.

19. 'கல்வி', 'கேள்வி' பற்றிய வள்ளுவரின் சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

'புலவி', 'புலவிநுணுக்கம்' குறித்த செய்திகளைப் புலப்படுத்துக.

20. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் பற்றிக் கூறுக.

(அல்லது)

திருக்குறள் கல்வியின் வாயிலாக நீவிர் பெற்ற நன்மைகளைப் பட்டியலிடுக.

&&&&&&&&&&